உ
சிவமயம்



மீசாலை வடக்கு வேம்பிராயைச் சேர்ந்த

# அமரர் சின்னப்பு நல்லதம்பி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# உள்ளத்தின் உள்ளே.......

08.06.2002

Pillaiyar Press

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



ஆருயிர் கொழுநனாய்
அன்பான அப்பாவாய்
பேரும் புகழுமாய்
பெருமை பெறச் செய்தவரே!
ஆறாத வேதனையும்
ஓயாத கண்ணீரும்
தாளாது நாமிங்கு
தாள் பணிந்து தந்திடுவோம்
ஏற்றிடுக இம்மலரும்
இன்றுமக்கு சமர்ப்பணமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அமரர்

# திரு. சின்னப்பு நல்லதம்பி

அவர்கள்

நொத்தாரிஸ் கிளார்க்- வேணி அன் கோ உரிமையாளர்

அகம் மகிழ் 1928 05 14



மனம் நெகிழ 2002 05 09

## திதி வெண்பா

ஆண்டுசித் ரபானு அம்புலி தேய்பருவம்
பூண்ட துவாதசி வியாழன் – கூண்டுவிட்டு
**நல்லதம்பி** நல்லான் இவ்வுலகை நீத்தே
நல்லுலகம் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன்கழல் போற்றி
ஆழி மிசைக்கல் மிதப்பிலணைந்த பிரானடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி.

## திருஞானசம்பந்தர் தேவாரம்

பண்:- குறிஞ்சி இராகம்:-அரிகாம்போதி
தாளம்:- ஆதி.

பாலனாம் விருத்தனாம் பசுபதிதானாம்
பண்டு வங்கூற்று தைத்து அடியவர்க்கருளும்
காலனாம் எனதுரை தனதுரையாகக்
கனலெரி அங்கையில் ஏந்திய கடவுள்
நீல மாமலர்ச் சுனை வண்டு பண் செய்ய
நீர்மலர்க்குவளைகள் தாது விண்டோங்கும்
ஏலம் நாறும் பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாய்ப் பேணி என்
எணில் கொள்வது இயல்பே.

பண்:- சாதாரி இராகம்:- பந்துவராளி
தாளம்:- ஆதி.

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ் திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்

மனத்தகத்தான் தலை மேலான் வாக்கினுள்ளான்
வாயாரத்தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்தப்பாலான் இப்பாற் செம்பொன்-
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்துச்சி உள்ளான்
காளத்தியானவனென் கண்ணுள்ளானே.

கலை ஞானங் கல்லாமே கற்பித்தானைக்
கடு நரகஞ்சாராமே காப்பான் தன்னைப்
பலவாய வேடங்கள் தானே யாகிப்
பணிவார்கட் கங்கங்கே பற்றானாகிச்
சிலையாற் புரமெரித்த தீயாடியைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிலையார் மணிமாட நீரோனை
நீ தனே னென்னே நான் நினையாவாறே.

## சுந்தரர் தேவாரம்

பண்:- இந்தளம்

இராகம்:- நாதநாமக்கிரியை
தாளம்:- ரூபகம்.

பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா
எத்தால் மற வாதே நினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையு
அத்தா உனக்காளாயினி அல்லேனெனலாமே.

காரூர் புனல் எய்திக்கரை கல்லித் திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீர்ர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
ஊரூரன் எம்பெருமான் காள் அல்லேன் எனல் ஆமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்:~ தக்கேசி

இராகம்:~காம்போதி
தாளம்:~ ஆதி.

அந்தணாளன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன் தன் ஆருயிரதனை
வவ்வினாய் குன்றன் வண்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமர்தமர் நலியின்
இவன் மற்றென் னடியான் என விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூர் உளானே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

கடையவ னேனைக் கருணையி
னாற் கலந் தாண்டு கொண்ட
விடையவனே விட் டிடுதிகண்
டாய் விறல் வேங்கையின் தோல்
உடையவனே மண்ணும் உத்தர
கோச மங்கைக் கரசே
சுடையவ னேதளர்ந் தேன் எம்பி
ரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

(திருமாளிகைத் தேவர் அருளியது)

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருவிசைப்பா

(சேந்தனார் அருளியது)

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண்குளிர்ந் தனவே.

## சேந்தனார் திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டு மனத்தவர் போமின்காள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடி குடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள்
அளவில்லாதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டு மீண்டு மென்று முள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்.

வேத நெறி தழைத் தோங்க
மிகு சைவத் துறை விளங்கப்
பூத பரம்பரை பொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீத வள வயற் புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு
திருத் தொண்டு பரவுமாம்.

உலகெலாம் உணர்ந் தோதர்க் கரியவன்
நிலவுலாவிய நீர் மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடி பேணி
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன் மகன்
மற்பொரு ததிரள் புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதவல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழடை வினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரி செய்த அச்சியனுறை ரதம்
அச்சது பொடி செய்த அதிதீரர்
அத்துயரது கொடு சுப்பிரமணி படும்
அப்புன மதனிடை யிடமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## கந்தரலங்காரம்

முடியாப் பிறவிக் கடலிற் புகார்
முழுதுங் கெடுக்கு
மிடியாற் படியில் விதனப்படார்
வெற்றி வேற் பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமான்
அவுணர் குல மங்கப்
பொடியார் சிவ பெருமான் திரு
நாமம் புகல் பவரே.

விழிக்குத் துணை திரு மென்மலர்ப்
பாதங்கள் மேன்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா வெனு
நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை யவன் பன்னிரு
தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலுஞ்
செங்கோடன் மயூரமுமே.

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித்
தொடர்ந்து வரும்
காலன் தனக்கொரு காலுமஞ்சேன்
கடல் மீ தெழுந்த
ஆலங்குடித்த பெருமான்
குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே
நமக்கொரு மெய்த்துணையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அந்தாதி

வவ்விய பாகத் திறை வரு நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியு முங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
பவ்வியம் தீர்த்தென்னை யாண்ட பொற்பாதமுமாகி வந்து
வெவ்விய காலனென் மேல் வரும் போது வெளி நிற்கவே.

## கந்தரனுபூதி

கார் மாமிசை காலன் வரிற் கலபத்
தேர் மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார் மார்பவளரி தளரியெனுஞ்
சூர்மா மடியத்தொடு வேலவனே

சாகா தெனையே சரணங்களிலே
காகா நமனார் கலகஞ் செயு நாள்
வாகா முருகா மயில் வாகனனே
யோகா சிவஞானொப தேசிகனே

எந்தயு மெனக் கருள் தந்தையும் நீ
சிந்தா குலமா னவை தீர்த் தெனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே.

## பட்டினத்தார் பாடல்

முடி சார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒரு
பிடி சாம்பலாய் வெந்து மண்ணாவது கண்டுமி இந்தப்
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம் பலவர்
அடி சார்ந்து நாம் உய்ய வேண்டு மென்று றறிவார் இல்லையே.

ஐயும் தொடர்ந்து விழியும் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டு வன்யான்
செய்யும் திருவொற்றி ஊர் உடையீர் திருநீறுமிட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே. எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசனடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமா றொன்று அறியேன்.
புல்லாகிப் பூ டாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுஉற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானாம் நாம விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவாயெனைப்புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாயெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையில் அருளிச்செய்த

# திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம்
(மனம் ஆனந்தத்திலேலயப்படுந் தன்மை)

முத்துநற்றாமம் பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நற்றீபம் வைமின்
சக்தியும் சோமியும் பார்மகளு
நாமகளோடு பல்லாண் டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியுங்
கங்கையும் வந்து கவரி கொள்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ண மிடித்து நாமே.

பூவியல் வார்சடை யெம்பிரார்க்கு
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுகின்ன ரண்ண கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் றொழுமி னெங்கோ னெங்கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே.

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கு
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன் நல்வேலன் தாதை
எந்தரம் ஆளுமையாள் கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ண மிடித்து நாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடன் அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தி
தேசமெல் லாம்புகழந் தாடுங்கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோவில் பாடி
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே.

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடன் அடிய வர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தி
தேசமெல் லாம்புகழந் தாடுங்கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோவில் பாடி
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே.

அறுகெடுப் பாரண னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற் பின்பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவே கம்பன் செம்பொற் கோயில்பாடி
பாச வினையைப் பிறத்து நின்று
பதடிப்பொற் சுண்ண மிடித்து நாமே.

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற் பின்பல்ல தெடுக்க வொட்டோம்
சிறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவே கம்பன் செம்பொற் கோயில்பாடி
பாச வனையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
　　உலகமெ லாம் உரல்போ தாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
　　காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
　　நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
　　மகிழ்ந்து பொற் சுண்ண மிடித்து நாமே.

சூழுகத் தோளவளை ஆர்ப்ப வார்ப்பத்
　　தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்ப வார்ப்ப
　　நாமுமவர் தம்மை ஆர்ப்ப வார்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும் மங்கை
　　பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்ன கோவுக்
　　காடப் பொற் சுண்ண மிடித்து நாமே.

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
　　வரிவளை ஆர்ப்ப வண் கொங்கை பொங்க
தோள்திரு முண்டகந் துதைந் திலங்க
　　சோத்தெம் பிரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
　　நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
　　ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே.

வையக மெல்லாம் உரலதாக
　　மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
　　மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடி
　　செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
　　ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கை ஆட ஆட
மொய்கழல் வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கயற் கண்பனி ஆட ஆட
பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணை யோ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

பாடு நாகைவான் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவளந் துடிப்ப
பாடுமின் நம்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே.

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினை பொற்கொடித் தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைய யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான் மகட்கு
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமைய னெம்மையன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க மரற்றச் சிலம் பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடி
கங்கை இரைப்ப அராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானை
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்தி
பானற் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே.

ஆவகை நாம்வந் தன்பர் தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர்க ளாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ண மிடித்து நாமே.

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப்பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்து
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாக நஞ்சுண்டல் பாடி
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே.

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந் தென்தில்லை பாடி
சிற்றம்பலத் தெங்கள் செல்வம் பாடி
கட்டிய மாகணக் கச்சை பாடி
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடு மாரவம் பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்து நாமே.

வேதமும் வேள்வியும் ஆயனர்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினர்க்கு
சோதியு மாயிரு ளாயி னார்க்கு
துன்பமு மாயின்ப மாயி னார்க்கு
பாதியு மாய முற்று மாயினார்க்கு
பந்தமு மாய் வீடுமாயி னார்க்குக்
ஆதியு மந்தமு மாயி னாருக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே.

****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதா ரமளியின்மேனி நின்றும் புரண்டிங்கண்
ஏதேனும் ஆகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்து
ஈசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
னத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையி ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ டுள்ளவர் செல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலும் நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள் பணிவோமாங் கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியு மெல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
மெய்யாமற்காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள் ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்கண் ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யாவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்



*தேவராய சுவாமிகள் அருளிய*

# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் -கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள்
கந்தர் சஷ்டிக் கவசம் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

நூல்

நிலமண்டல ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்க வென்று வந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங்கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம் சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக்காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
நாணாங்கயிற்றை நல்வேல்காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதா ளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூ ரான்
கடுவிட விஷங்கள் கடித்துயர ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளிக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகியவேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
விழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

# சகலகலா வல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே
சகல கலாவல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவிநின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோர்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காய்யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமை
கொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொரு
கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும்விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்முளதோ
சகல கலாவல்லியே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி துதி.
### (அபிராமிப் பட்டர் அருளிச் செய்தது)

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத விளமையும்
கழுபிணி யிலாத உடலும்

சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்புமுத விப்பரிய
தொண்ட ரொடு கூட்டு கண்டாய்

அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே.

தனம்தரும் கல்விதரும் ஒரு நாளுந் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்ட மெல்லாம்.
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவி அடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க் கொரு தீங்கில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோத்திரம்

## காப்பு

மண்ணிலுயிர் கட்கனைத்து
மாறா தளித்து நல
நண்ணு நவக்கிரக நண்பு
சொலத் ~ தண்ணிலவு
திங்களணி தங்குமுயர்
செங்சடைய ருண்மகிழ்செய்
கங்கையரு ளைங்கரனார்
காப்பு

## சூரியன்

காசினியிருளை நீக்குங்
கதிரொளி யாகியெங்கும்
பூசனை யுலகோர் போற்றப்
புசிப்பொடு சுகத்தை நல்கும்
வாசியே ழுடைய தேர்மேல்
மகாகிரி வலமாய் வந்த
தேசிகா வெனைரட் சிப்பாய்
செங்கதி ரவனே போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரன்

அலைகட லதனி னின்று
மன்றுவந் துதித்த போது
கலைவளர் திங்க ளாகிக்
கடவுள ரெவரு மேத்துஞ்
சிலைமுத லுமையாள் பங்கன்
செஞ்சடைப் பிறையாய் மேரு
மலைவல மாக வந்த
மதியமே போற்றி போற்றி.

## செவ்வாய்

வசனநற் றைர்யத் தோடு
மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்ர மங்கள்
போர்தனில் வெற்றி யாண்மை
நிசமுட னவர வர்க்கு
நீணிலந் தனில ளிக்குங்
குசனில மகனாஞ் செவ்வாய்
குரைகழல் போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன்

மதனநூல் முதல நான்கு
மறைபுகழ் கல்வி மானம்
விதமுட னவர வர்க்கு
விஞ்சைக ளருள்வோன் றிங்கள்
சுதன்பசு பாரி பாக்கியஞ்
சுகம்பல கொடுக்க வல்லான்
புதன்கவி புலவன் சீர்மால்
பொன்னடி போற்றி போற்றி.

## குரு

மறைமிகு கலைநூல் வல்லோன்
வானவர்க் கரசன் மந்தரி
நறைசொரி கற்ப கப்பொன்
னாட்டினுக் கதிபனாகி
நிறைதனஞ் சிவிகை மண்ணி
னீடுபோ கத்தை நல்கு
மிறையவன் குரு வியாழ
னிருமலர்ப் பாதம் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுக்கிரன்

மூர்க்கவான் சூரன் வாணன்
முதலினோர் குருவாய் வையங்
காக்கவான் மழைபெய் விக்குங்
கவிமகன் கனகமீவோன்
தீர்க்கவா னவர்கள் போற்றச்
செத்தவர் தமையெழுப்பும்
பார்க்கவன் சுக்கிரன் றன்றன்
பாதபங் கயங்கள் போற்றி.

## சனி

முனிவர்க டேவ ரேழும்
மூர்த்திகள் முதலி னோர்கள்
மனிதர்கள் வாழ்வு முன்றன்
மகிமைய தல்லா லுண்டோ
கனிவுள தெய்வ நீயே
கதிர்சேயே காக மேறுஞ்
சனியனே யுனைத் துதிப்பேன்
றமியனேற் கருள் செய்வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராகு

வாகுசேர் நெடுமான் முன்னம்
வானவர்க் கமுதமீயப்
போகுமக் காலை யுன்றன்
புணர்ப்பினாற் சிரமே யற்றுப்
பாகுசேர் மொழியாள் பங்கன்
பரன்கையில் மீண்டுபெற்ற
ராகுவே யுனைத் துதிப்பேன்
ரட்சிப்பாய் ரட்சிப்பாயே.

## கேது

பொன்னையி னுரத்திற் கொண்டோன்
புலவர்தம் பொருட்டா லாழி
தன்னையே கடைந்து முன்னந்
தண்ணமு தளிக்க லுற்ற
பின்னைநின் கரவா லுண்ட
பெட்பினிற் சிரம்பெற் றுய்ந்தா
யென்னையாள் கேது வேயிவ்
விருநிலம் போற்றத் தானே.

## பொது

சூரியன் சோமன் செவ்வாய்
சொற்புதன் வியாழன் வெள்ளி
காரியு மிராகு கேது
கடவுள ரொன்பா னாமத்
தாரிய் சக்க ரத்தைத்
தரித்திரர் பூசித் தாலும்
பாரினிற் புத்திர ருண்டாம்
பாக்கிய நல்குந் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தினுள்ளே.................

வளம்பெறு தென்மராட்சி வாழ்ந்திடு மீசாலையூரில் நலந்திகழ் நாகமுத்து தனுஷ்கோடி பெற்ற வள்ளிப் பிள்ளையாம் கடைக்குட்டி தனில் பெருவிருப் புமேயாக இலங்கிடும் கந்தர்மகனாம் சின்னப்பு என் பான் வந்தே கலந்தனன் திருமணத்தில் செய்கருமமே தோட்டமாக உயர்ந்ததாம் திடலிப்பிட்டி திரவியம் புதையலுண்டாம் நயம்விளை மாந்தரெல்லாம் நண்ணி அது அடைய வொண்ணா திருந்தனர் சின்னப்பர் தில்லையங்காடது தோட்டமாக்கி பெறுமுயர் செல்வ மக்கள் எழுவரைப் பெற்றபோது ஒருவனோ உலகை நீத்தே உவந்தவனடியும் சேர அறுவரில் மூத்தான் நல்லதம்பி குஞ்சையனாமே.

மூத்தவன் முத்து என்றே சீராட்டிட பாராட்டிட சிறந்ததாம் பண்பு பழக்கம் யாவுமே ஊட்டி வளர்க்க அமெரிக்கன் மிஷனில் ஆரம்பம் கற்றுப் பின்பு விக்கினேஸ் வராவில் கல்வி விரும்பியும் கற்றவேளை அப்பனோர நாற்பத்திரண்டில் அவனடி சேரல் கண்டு தப்புமா விதிக்கு வாழ்வு தவறுமா நாளது நேரம் தெப்பமா யலைந்து குடும்பச் சுமையினை முன்னேதூக்கி மிக்கவோர் உழைப்பில்லை எனவே மேதினியுழுது விதைத்தே தக்கதாம் பயிர்கள் செய்து தம்பியர் துணையும் கொண்டு உற்றதாம் உயர்ந்ததாம் என்று உறவினர் யாரும் பேச நற்றமிழ் தாய்வள்ளி மக்கள் நலமுடன் வாழலானார்.

கத்தரி மிளகாய் வெண்டி வாழையொடு பூசினி பயிற்றை தக்காளி பொன்னாங்காணி விற்றிடத் துணையாம் தாயார் செப்புவார் குஞ்சையாண்ணை தப்பாமல் செய்ய வேண்டும் இப்படித் தம்பியர் இருவர் பயிர்செய்து பாடம் கற்றார்.

வண்டியில் வருமானங்கள் வந்துமே வீடு நிறைக்க கண்டவர் அல்லாரைச் சின்னத்தம்பி தம்மகள் செல்லம்மாவை மூத்தவன் குஞ்சையற்கே முடித்துமே அகமகிழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவான் வளவு வைரவை கங்காணி முருகனாரை அறுகம்புலப் பிள்ளையாரை பூதிவரத விநாயகரை வேண்டு வேண்டிக் கருமங்கள் விரும்பிநாளும் செய்திடவே மக்கள் நால்வர் செல்வமென மகிழ்ந்துவரம் தந்தனரே.

குமணன் பார்த்திபன் ஆதி ரைபொடு சுபத்திரை இருவர் ஆண்கள் இருவர் பெண்கள் என்றெண்ணி மகிழ்ந்தனரே உற்றவர் உடன்பிறந்தார் யாவருமே பாசமுடன் பற்றுடனே பண்புபழக்கம் ஊட்டிநாளும் கலந்தனரே.

விக்கினேஸ் வராமுடிந்து இந்துவிலும் கல்வி கற்று தக்கமக்கள் என்றுபோற்ற தரணியில் வைத்தனரே.

குமணன்தானும் வெளிநாட்டில் வேலைவாய்ப்புத் தானும்பெற்று ஜான்சிராணி யைமணந்து மக்கள் இருவர் பெற்றனரே கீர்த்தனன் அஸ்வதியும் வந்து தாத்தா வைப்பார்த்தும் பாட்டி ஊர்க்கு வந்தோமெனப் பாடிக்காட்டிப் பேசியது நாட்டில் மீண்டு வன்கூவர் போயங்கு சேர்ந்ததும் வீட்டில் பேசிஅடிக் கடிநாள் நினைவுகூர்ந்து நின்றனரே.

பார்த்திபனோ பிரான்ஸ் நாட்டில் பார்ந்திருந்து தொழிலும் பெற்று பெற்றதாயர் தந்தையரைப் பார்த்துச்சென்ற ஒருகாலம் அன்புடைய அயோனாவை ஆதரவுடனே மணந்து இன்பமுடன் பெற்றமகன் கெவினுடன் பானுஜனும் இலங்கை நாட்டை எண்ணி எண்ணி எப்போ போவோம் என்று தன்னில் அசைபோட்டுப் பார்த்த கணக்கு ஆயிரம் ஆயிரம். நம் நாட்டில் அடிக்கடிதான் சகடயோகம் வந்து போகும் காலை மாலை ராகுகாலம் தலையைநீட்டி வாலை ஆட்டும். எம் நாட்டில் பெற்றவர்கள் வெளிநாட்டில் புதல்வர்கள் அந்நாட்டில் திருமணங்கள் அவ்விதிக்கே நடந்தேறும்.

இளையாள் சுபதி சொந்த மாமன் இரத்தினத்தின் மகனான உதயகுமாரை மணந்து உறவை வளர்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனளே. கௌசிகா கோபிகா எனப்பேர்த்தி மார்களை பவ்யமாக வளர்த்துப் பார்த்து மகிழ்ச்சி மிகக் கொண்டனரே.

மூத்தபெண்ணாம் ஆதிரையாள் முழுதுங்கற்ற பின்புதானே திருமணமே செய்வேனென்று படித்துப் பட்டம் பெற்றனளே. வீரசிங்கப் பள்ளியிலே ஆசிரியப் பதவிபெற்று இராமநாதர் அதிபர் மகன் சர்வேந்திரனை மணந்து பிருந்தாபன் கோபிகிருஷ்ணா என்று மக்களைப் பெற்று தந்தை தாயருடனே இங்கே கூடியிருந்தே சண்டிலிப்பாய் இடம்பெயர்ந்த தாலே மீண்டு மீசாலை சேர்ந்தனரே.

நல்லதம்பி குஞ்சையாவை நாடிவருத்தம் வந்ததுமே நெஞ்செரிவு தலைச்சுற்றல் என்று சொல்லிப் படுத்தனரே புதுவருடம் அன்று கூட வீடு வரவில்லை புதுப்புது வருத்தமென்று வார்ட்டில் தங்கி இருக்க டாக்டர்கள் நோயில்லை என்றுகையை விரித்தார்கள் நாடிதானே கூடிக்கூடித் துடித்து வலியைக் கொடுக்கும்.

காலமிது மரணம் என்று கடவுள் நாமம் உச்சரிக்க காலநேரம் பார்த்து யம தர்மராஜனும் சுழல எழுபத்தைந்து ஆண்டு போதும் இனியேன் உடலைச் சுமக்க என்றுலக விவகாரங்கள் ஒதுக்கிவிட நினைத்தீர்.

குலம் விளங்கும் குறையில்லை இருவராகப் பேரர்கள் கூடி இவர்கள் வாழட்டும் புண்ணியங்கள் காக்கும் சாப்பாடு தண்ணீர் வேண்டாம் தாராளம் போதும் மேலோங்கு சிவனடிக்கே போகவிடை சொல்ல கைப்பிடித்த நாயகியாள் கதிகலங்கிக் கதறிடவும் பெற்றவர்கள் பேரர்கள் விம்மி வெதும்பி துடித்திடவும் உற்ற மரு மக்கள் சுற்றம் உணர்ந்து அன்பு செய்திடவும் சித்திரையில் வியாழனதில் சிவனடியைச் சேர்ந்தீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ஸ்ரீ ராம ஜெயம்

# பிரார்த்தனை உரை

வளம் பல கொழிக்கும் தென்மராட்சியிலே தமிழும் சைவமும் தளைத்தோங்கும் மீசாலை கிராமத்திலே சீலமும் சிறப்பும் மிக்க உயர் குடித் தோன்றலான சின்னப்பு வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வனாக 1928ம் ஆண்டில் திரு. நல்லதம்பி அவர்கள் உதித்தார்கள். இவருக்கு இரு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உடன் பிறந்தார்கள். சிறு வயதிலிருந்தே அன்பு, பாசம், ஒழுக்கம், கல்வி, பண்பு, கடவுள்பக்தி என்பவற்றில் சிறந்து விளங்கினார். ஜே. எஸ். சி கற்கும் காலத்திலே தந்தையாரை இழந்ததினால் கல்வியியை இடை நிறுத்தி குடும்ப பொறுப்பை இவர் ஏற்க வேண்டியதாயிற்று. இவரது நற்குணங்களால் குடும்பம் சிறப்பான நிலைக்கு உயர்ந்தது. உடன் பிறந்தோரை தனது அயராத முயற்சியால் நன்நிலைக்கு உயர்த்தி அவர்களுக்கு பொருத்தமான வாழ்க்கை துணைகளை தேடிக்கொடுத்தார். தனது திறமையால் நொத்தாரிஸ் கிளாக்கராக பணிபுரிந்ததுடன் விவசாயத்தையும் செய்து வந்தார். இவர் தனது வாழ்க்கை துணைவியாக அல்லாரையை சேர்ந்த திரு. சின்னத்தம்பியின் கனிஷ்ட புத்திரியான செல்லம்மாவை கரம்பிடித்தார். இவர்களின் இல்லற வாழ்க்கையின் பயனாக இரு ஆண் பிள்ளைகளையும் இரு பெண் பிள்ளைகளையும் பெற்று மகிழ்ந்தார்கள்.

கிளாக்கர் என ஊர் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. நல்லதம்பி அவர்கள் தமது சுய கருமங்களுடன் மட்டும் நின்றுவிடாது சமய சமூக பணிகளிலும் ஈடுபாடு கொண்டு விளங்களினார். கங்காணியார் கந்தசுவாமி கோவில் பரிபாலகராக இருந்து ஆலய முன்னேற்றத்திற்காக அரும்பணியாற்றினார். தனது மக்களுக்கு சிறப்பான வாழ்வை அமைத்து கொடுத்து பேரப்பிள்ளைகளை கண்டு மகிழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவான வாழ்வு கிடைக்கப் பெற்ற திரு. நல்லதம்பி அவர்கள் 09.05.2002 இல் அமரத்துவம் அடைந்தார்.

வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம் என்றும்
நமக்கும் அது வழியே நாம் போமளவும்
எமக்கு என்னென்று இட்டு உண்டு இரும் என்றும்

எப்போதோ கூறி வைக்கப்பட்ட அனுபவமொழிகளை சிந்தித்து தெளிவுற்று அமரரின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்தனை புரிவோமாக.

ஓம் சாந்தி

**ஸ்ரீவத்ஸ.வ. இராஜேஸ்வரக்குருக்கள்**
**பிரதமகுரு**
**ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்**
**வண்ணார்பண்ணை**
**யாழ்ப்பாணம்.**

## உண்மையின் உள்ப்பொருள்

ஏழைகள் எப்போதும் எமக்கு ஏராளமான அன்பை வாரி வழங்குவார்கள் ஆண்டவனின் பிரியவர்களான ஏழைகளிடம் ஆண்டவன் நமக்களித்த வரப்பிரசாதமான அன்பைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்காக இறைவனுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

**அன்னை தெரேசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்கண்டு மனிதர்

தின் வணங்கும் விநாயகர், முருகன் அம்பாள் ஆகிய கடவுளர்க்கு அடுத்த படியாகத்தான் செய்யும் தொழிலையே தெய்வமாகக் கொண்டு நெறி பிறளாது வாழ்க்கை நடத்தியவர் குஞ்சையா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பெறும் அமரர் சின்னப்பு நல்லதம்பி அவர்கள் ஆவார்.

ஒரு குடும்பத்தின் மூத்த பிள்ளையாக, ஒரு தந்தையாக, ஒரு நல்ல ஊரவராக ஒரு நொத்தாரிசுக் கிளாக்கராக எப்படி வாழ வேண்டுமென்பதற்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியவர்கள் அவர்கள் ஒரு இளம் நொத்தாரிசுவுக்குத் தெரியாத எத்தனையோ விடயங்களை தனது தொழில் விடயத்தில் அறிந்து வைத்திருந்தவர் ஐயா அவர்கள்.

வார்த்தைகளை மிகக் குறைவாகப் பயன்படுத்திச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதக்கூடிய திறமை இயல்பாகவே இவரிடம் அமைந்திருந்தது. இவரது உடல்தான் அழிந்தது. இவர் எழுதிக் குவித்த உறுதிகளோ காலம் காலமாக நிலைத்து நிற்கும் அழியாத் தன்மை யுடையன.

வஞ்சகமற்ற உள்ளம் அது போலவே உடலும் வஞ்சகமற்று வளர்ந்திருந்தது. அவர் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கும் அழகே தனி உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை கற்கண்டு மனிதர் அவர்.

தனது இளமைக்காலத்தைத் தன் உடன் பிறப்புக் களின் உயர்ச்சிக்காகவும் வாலிப காலத்தைத் தன் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காகவும் முதுமைக்காலத்தைத் தன் ஊர் மக்களின் நலனுக்காகவும் செலவழித்துப் பிறந்த தன் நோக்கத்தை நன்கு நிறைவுசெய்தவர் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் எனது சம்பந்தியாக வந்தது நான் பெற்ற பெரும் பாக்கியமேயாகும்.

“நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை படைத்திவ்வுலகு”

பிறந்ததன் பயனே நிறைந்திட வாழ்ந்த
பேரொளி எங்கள் குஞ்சையா
இறந்தது உடலே ஆத்துமா அல்ல
இதனை நாம் மனதிலெ பதிப்போம்
மறந்திடப் போமா உயர்ந்த உம் வாழ்க்கை
மாசற்ற தெய்வமே உம்போல்
அறம்பல செய்து தொண்டராய் வாழ்வோம்
உமக்கு நாம் செய்யும் கைமாறிதுவே

**மிருசுவில். சி. இராமநாதர்**
**இளைப்பாறிய அதிபர்.**

**சிந்தனைக்கு............**

உங்கள் தோல்விகளை நினைத்துப்பார்த்து ஏன் தோற்றோம் என்று ஆராய்ந்து தோல்வியின் காரணத்தைத் தவிர்த்து வெற்றியடையுங்கள் என்கிறார்கள். அதற்குப் பதிலாக உங்கள் வெற்றிகளை ஆராயுங்கள் அவற்றிற்குக் காரணமாக இருந்த பண்புகளையும் பின்பற்றுங்கள். தொடர்ந்து வெற்றியடைவீர்கள்.

~ஹல்டேன்~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாறாத நினைவுகள்

"நெருநல் உளனொருவனின்றில்லை" ..............................

முத்தமிழும் மூதறிஞர்களும், கற்றறிந்த பெரியோரும், கலைஞர்களும் வதிகின்ற மீசாலை ஊரில் திரு சின்னப்பு, வள்ளிப்பிள்ளை தம்பதியினருக்கு சிரேஷ்ட புதல்வனாக அமரர் திரு நல்லதம்பி அவர்கள் பிறந்தார்.

"விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பது போல் விவேகமுடையவராக காணப்பட்டார். இவர் ஆரம்பக் கல்வியை அயலில் உள்ள அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும், உயர் கல்வியை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் தொடர்ந்தார். இக்காலத்தில் அன்பு, அறிவு, ஆற்றல், பரிவு, கீழ்ப்படிவு முதலிய சீரிய குணங்கள் உடையவராகத் திகழ்ந்தார் கனிஷ்ட தராதரப்பத்திர் வகுப்புப் பயின்று கொண்டிருந்தபோது தந்தையை இழந்தார். "தந்தையொடு கல்வி போம்" என்னும் கூற்றுப்படி இவர் கல்வியும் தடைப்படலாயின குடும்ப நிலை காரணமாக பொருள் தேட வேண்டிய அவசிய மேற்பட்டதால் விவசாயத்தை மேற்கொண்டார். கவலை ஒரு புறம் வாட்டினும் உறுதியுடன் உழைத்து முன்னேற்றமடைந்தார். தாய், சகோதரர்களை அன்போடு அரவணைத்து ஆவன செய்தார்.

"ஈதல் இசைபாடவாழ்தல் அது அல்லது ஊதிபமில்லை உயிர்க்கு" என்ற வள்ளுவர் கூற்றுக்கேற்ப இரப்பவர்க்கு ஈதல், பிறர்க்கு உதவுதல் போன்றவற்றிலும் அக்கறை உள்ளவராகத் திகழ்ந்தார்.

காலமும் உருண்டோடின. மணப்பருவமும் வந்தெய்தவே 1960ம் ஆண்டு அல்லாரையூர் திரு சின்னத்தம்பி மகள் செல்லம்மா என்பவரை வாழ்க்கைத் துணையாக ஏற்றார்.

இல்லறத்தின் பயனாக "மங்கலமென்பது மனைமாட்சி மற்று அதன் நன்கலம் நன் மக்கட்பேறு" என்னும் பொய்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கேற்ப பாசமுள்ள நன்மக்கள் நால்வரைப்பெற்று அகமகிழ்ந்தார். அவர்கள் சீரிய முறையில் வாழ வழிவகுத்தார். அவர்கள் அனைவரினதும் பேர மக்களையும் கண்டு பெருமை கொண்டார்.

இவருடைய சிறந்த எழுத்தாற்றலும் அழகான கையெழுத்தாலும் நொத்தாரிஸ் கிளாக்கர் பதவி கிடைத்தது. தென்மராட்சி மட்டுமன்றி வடமராட்சி, கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களிலெல்லாம் சேவையாற்றினார். நேர்மையும் திறமையுமே இவரின் முன்னேற்றத்திற்குக் காரணமாமென்றால் மிகையாகாது. இவரைக் "குஞ்சையாக் கிளாக்கர்" என் அழைப்பர்.

சிதைவுற்றிருந்த இலந்தைக் கூடல் கங்காணியார் முருகன் ஆலயத்தைச் செப்பனிட அமைக்கப்பட்ட பரிபாலன சபையில் முதற் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டு, ஆலய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தார். மேலும் குலதெய்வமாகிய வைரவருக்கு ஆலயமமைத்துச் சிறப்பாகப் பூசைகள் நடைபெறச் செய்தார். அது மட்டுமற்றிச் சமூகத் தொண்டுகளிலும் ஈடுபாடுடையவராய் பெயருக்கேற்ப நல்லதம்பியாகவே வாழ்ந்தார். இவ்வாறு வாழுங் காலை வினைப்பயன் கூட்ட, சில காலம் நோய் வாய்ப்பட்டு இறைபதமெய்தினார் அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கங்காணியார் முருகன் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணையென்று பெயரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே"

என்ற நிலையுணர்ந்து ஆத்ம சாந்தியடை:வோமாக.

**சகோதரன்**
**க.பெ.மார்க்கண்டுவும்,**
**(இளைப்பாறிய அதிபர்)**
**பாரியாரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சையா என்னும் நல்லதம்பி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாக வாழ்கின்ற அமரர் சின்னப்பு நல்லதம்பி அவர்களுக்கு நினைவு அஞ்சலி வழங்குவதில் நான் மன நிறைவடைகின்றேன். கடந்த 12 வருடங்களாக அவருடன் பழகியுள்ளதால் அவரதும், அவரது குடும்பத்தினதும் சிறப்பினை அறிந்து கொண்டேன். தென்மராட்சி மக்களின் இடப்பெயர்வின் போது சண்டிலிப்பாயில் தங்கியிருந்த காலப்பகுதியில் அவருடன் அடிக்கடி தொடர்பு கொண்டு பழகியதால் அவருடன் உள்ள உறவு மேன்மேலும் நெருக்கமாகியது.

நான்கு பிள்ளைகளையும் எட்டுப் பேரப்பிள்ளைகளையும் பெற்றவராய் பொலிவுடன் பெருவாழ்வு வாழ்ந்த குஞ்சையா அவர்கள் அன்பு, இரக்கம், பொறுமை, சகிப்புத் தன்மை, தருமம் முதலான சிறந்த குணநலன்கள் உள்ளவராய் உயர்ந்த பண்பாளனாய் வாழ்ந்து தனது குடும்பத்திற்கும் அயலவர்களிற்கும் நிழல் தரு மரமாக விளங்கினார்.

தந்தையினை 12 வயதில் இழந்து சகோதரங்களிற்குத் தலைவனாகத் திகழ்ந்து வழிகாட்டி, உயர்வடையச் செய்ததுடன் தனது வாழ்க்கையில் தொழிலிடத்திலும் (கிறேசர்), தோட்டத்திலும் பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கி, அவர்களை சந்தோசப்படுத்தி மகிழ்வடைந்ததுடன் அவர்களின் முன்னேற்றத்திற்கும் ஏதுவாக விளங்கினார்.

1995 வலிகாமத்து மக்கள் பெருமெடுப்பில் இடம்பெய்ர்ந்த காலத்தில் பலரை ஆதரித்து தங்குமிடவசதி கொடுத்து கல்விகற்பதற்கான ஊக்கமும் அளித்து, பலரை உயர்வடையச் செய்துள்ளார். நானும் ஒரு வலிகாமத்தான் என்ற வகையில் குஞ்சையாவின் தியாக மனப்பான்மையையும், பரோபகார சிந்தையையும் எடுத்துக்கூறாமல் இருக்கவும் முடியாது. கடந்த கால மக்களின் இடப்பெயர்வுகள் ஐயாவின் மனதில் பெரும் தளர்வை ஏற்படுத்தி விட்டன. அத்துடன் அவரது உடன் பிறப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்ததும் மேலும் தளர்வுற்று பின் தெளிவுற்று "ஒரு பொல்லாப்பும் இல்லை" "எல்லாம் செப்படி வித்தை" என்பவற்றை நன்குணர்ந்து இறைபதம் எய்தினார்.

அன்னாரின் ஆத்மா இறைஜோதியில் சங்கமித்து சாந்தியடையும் என்பதில் ஐயமில்லை. "பிறப்பொன்று உண்டேல் இறப்பென்பது திண்ணம்" என்ற உண்மையறிந்து இப்பூவுலகில் வாழுங்கால் நாமும் நிறை புண்ணியங்களை செய்யவேண்டும் என்றும், அன்னாரின் பிரிவுத் துயரில் தவிக்கும் அன்னாரின் குடும்பத்தவருக்கும் சமூகத்தினருக்கும் ஆறுதல்களையும் தெரிவித்து கொள்கின்றேன்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு"
-குறள்-

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

**மாவை.செ. நவரத்தினம்**
**(மாவிட்டபுரம்)**

இந்துமதம் மிக மிக விரிவான ஆழ்ந்த ஆத்மனுபவங்களின் மூலமாக எவற்றையெல்லாம் அடைய முடியுமோ அவையாவற்றிற்கும் உரிய வழிகளை மனிதனுக்குத் திறந்து விட்டுள்ளது.

ஸ்ரீ அரவிந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.சி. பரமலிங்கம்
## (சிறிவிநாயகர் வெதுப்பகம்-மீசாலை) அவர்களின் ஆற்றாமை கலந்த கண்ணீர்க்காணிக்கை.

பண்புடன் பாசம் கொண்டு பாரினில் நீர் பிறந்து
அன்புருவாக வந்து அகிலத்தில் நீர் சிறந்து
நல்லவனாக வாழ்ந்த நம்மவர்க்கு நலங்கள் ஈந்த
நல்லதம்பி மாமா! உம்மை நாமினிக் காண்பதெப்போ!

அறிமுகம் செய்து என்னை அன்புடன் அரவணைத்தீர்
அறிவுரைபலவும் தந்து ஆக்கமும் ஊக்கம் தந்தீர்
உறவுகள் இணைந்து வாழ ஒற்றுமை வாழ்வைக் காண
சிறப்புடன் செய்த தொண்டு சிந்தையில் நிற்குதைய்யா!

நோயினால் வெந்த போதும் வெந்துயர் பட்ட போதும்
பாயினில் வீழ்ந்து நீரே படுந்தயர் பட்ட போதும்
எம்மன்பு மறக்க வொண்ணா எம்முடன் பேச நின்ற
உம்மன்பு மறக்கலாமோ நினைவினைத் துறக்கலாமோ!

மக்களோ மயங்கியழ மருமக்கள் சேர்ந்து அழ
பக்கத்தார் பதறியழ பாலராம் பேரர் அழ
உற்றாரும் உருகியழ ஊருமே குலுங்கியழ
கொற்றவா! சென்றதெங்கே! குடும்பமே கலங்குதிங்கே

கனவிலே வந்து தானும் கதைத்திடும் எங்களோடு
நனவிலே என்று காண்போம் களித்திட உங்களோடு
மண்ணகம் மறந்து சென்ற மாசிலா எங்கள் மாமா!
விண்ணக வாழ்வதற்கு எம்முடை அஞ்சலிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் மூத்தண்ணா

எங்கள் ஆறு பேரில் மூத்தவர் தான் மூத்தண்ணா. எல்லோரும் மகிழ நல்லதம்பி என்னும் நாமங்கொண்ட மூத்தண்ணா, குஞ்சையா என்னும் செல்லப் பெயரும் கொண்டவர்.

எனது எட்டுவயதில் தந்தையை இழந்த போது அவருக்கு வயது பன்னிரண்டு. கவலை தெரியாதவர் எங்கள் மூத்தண்ணா. தாயாரின் கஷ்டத்தால் தந்தையொடு கல்விபோம் என்னும் முதுமொழியின் படி கல்வியை நிறுத்திக் கொண்டவர். எம் மூத்தண்ணா.

எனது கணவரின் பள்ளித் தோழனாகவும் இருந்தவர் மூத்தண்ணா. பதினெட்டு வயதில் எமலோகத்தையே தரிசித்து வந்தவர் எம் மூத்தண்ணா. நாலு குழந்தைகளுக்கு தந்தையாகி நால்வரையும் நல்வழியில் வாழ் வழிவகுத்துக் கொடுத்தவர் எம் மூத்தண்ணா.

பிள்ளைகள் அவரின் அன்பு மனைவி சகோதரங்கள் கவலை கொள்ளத் தம்பி கிருஷ்ணசாமியை முன்செல்ல விட்டுத் தான் பின் சென்றார் எம் மூத்தண்ணா. அழகான கையெழுத்தை உடை மூத்தண்ணா அரன் எழுதிய எழுத்தின்படி மண்ணுலக வாழ்வை முடித்துக் கொண்டு விண்ணுலகடைந்து விட்டார்.

அரன் திருவடியில் அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி

**அன்புச் சகோதரி**

**திருமதி. தங்கம்மா ஏரம்பமூர்த்தி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசம் பொங்கும் துயர் நிறைந்த இதயத்துடிப்புக்கள் தவிப்புக்கள்

இலங்கு புகழ் ஓங்கும் ஈழ உயர் திருநாட்டின் வளங்கள் பல மலிந்த சுத்தத் தமிழ் மணக்கும் சுந்தர ஊர் யாழ்ப்பாணம் இதன் தென்பால முக்கனிச் சோலைகள் மலிந்த தென்மராட்சியில் மீசாலையம்பதியில் சின்னப்புவுக்கும் வள்ளிப்பிள்ளைக்கும் பிறந்த ஏழு மக்களுள் இரண்டாவதாக பிறந்தவர் தான் எம் பெரியண்ணா "குஞ்சையா" என செல்லமாக அழைக்கப்படும் அமரர் நல்லதம்பி ஆவார்.

முதல பெற்ற மகளை இறைவனுக்கு அர்ப்பணித்து விட்டு குஞ்சையாவையே மூத்தமகனாக செல்லமாக வளர்த்தனர். பின் தன் இளவல் தாமோதரனும் தோன்றவே இருவரும் கூடியாடி மகிழ்ந்து வளர்ந்து வரும் நாளில் தம் ஆரம்பப் பல்வியை மீசாலை அ.மி.பாடசாலையில் கற்றனர். தன் மக்கட்கு உயர் கல்வி பயில்விக்கும் அவாவில் யா/சாவகசச்சேரி டிறிபேக் கல்லூரியில் சேர்த்து கற்பித்தனர். இவர்களின் கல்விக்குத் தடை ஏற்பட்டது. பிற்சகோதரர்களும் நான்கு பேர்.

தந்தைக்கு சர்ப்பம் தீண்டியதால் இறைபதம் சேரும் தருணத்தில் "இனிமேல் படிக்க வசதி போதாது இருக்கும் தோட்டத்தைச் செய்து இளையவர்களை காப்பாற்றுங்கள்" எனக் கூறிப் போந்தார் தந்தையின் கட்டளையைச் சிரமேற் கொண்டு தோட்டவேலையை செய்து இளையவர்களை காப்பாற்றினர். எம் அண்ணையின் அரவணைப்பில் நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்தோம்.

எம் அண்ணன்மார் இருவரும் கத்தரித்தோட்டம் செய்து மூடைகளில் கொண்டுவந்து வீட்டில் வைத்து கடகத்தில் சுமை சுமையாக உயர்த்திக் கட்டி அழகுபார்க்கும் வண்ணம் இன்னமும் என் கண் முன் நிற்கிறது. மேலும் கரணை, இராசவள்ளி என்பவற்றை மாட்டுவண்டியில் ஏற்றி ஒவ்வொரு கிழங்கையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருமாக இறக்கும் காட்சி விவசாயப் போட்டிகளில் பங்குகொண்டு பரிசுகள் பெற்ற காட்சிகள் இம்மட்டுமா? மாட்டுவண்டிச் சவாரி மாடுகள் வளர்த்தல், மாட்டு வண்டிச்சவாரிகளில் பங்குகொள்ளல் இன்னும் பற்பல ஒரு புகைப்படக்கருவி இருந்திருந்தால இப்பவும் பார்க்கலாமே என அங்கலாய்க்கின்றேன். இவர் எம் அன்னைக்குச் செல்லப்பிள்ளை போன்றவராதலால் நாம் வள்ளியின் செல்வன் எனச் செல்லமாகவும் அழைப்போம். இவை பெரியண்ணாவின் இளமைப் பிரலாபங்கள்.

பின் மணவாழ்வெய்திச் சகல செல்வங்களும் பெற்று சீர் சிறப்போடு வாழ்ந்து இறைபதம் அடைந்தார். இவர் கையெழுத்துக்கள் முத்தானவை எங்கும் காணமுடியாது இவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**அன்புத் தங்கை**
**நல்லம்மா பொன்னம்பலம்**
**(இளைப்பாறிய ஆசிரியை)**

அபாயத்தைக்கண்டு அஞ்சாமல் யாரொருவன் தன்னுள் மறைந்துள்ள சக்திகளை வெளிக்கொணர்ந்து சமாளிக்கிறானோ அவனே தைரியசாலியெனக் கருதப்படுவான்.

ஸ்ரீ ஏகாந்ரனடே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடுபட நானறியேன்..........................

என் மூத்த அண்ணனின் திருமணத்தின் போது என் கண்கள் பார்வையின்றி மூடியிருந்ததும், நான் அண்ணியைத் தடவிப் பார்த்ததும் பூமாலை கையில் தட்டுப்பட்டதனால் பூமாலை அண்ணி என்று அழைத்ததும் கண்கள் பார்வை பெற்ற சில நாட்களில் உங்கள் வீட்டிற்கு வந்ததும் இன்றும் நல்ல ஞாபகமாக இருக்கிறது.

பன்ன வேலை செய்த தட்டு நிறைய மாம்பழங்கள் கறுத்தக் கொழும்பான், அம்பலவி, வாழைக்காய்ச்சி, செம்பாட்டான் என்று அவை பல வகையாம் எனக்கு எல்லாமே புதுமையாக இருக்கிறது. மாம்பழம் சாப்பிட்டபின் வளவைப் பார்க்கிறேன் பலவகை மாமரம், பலாமரம், வண்டில், கொட்டில், எருத்தின் குடில், நாரத்தை, தோடை, அடர்ந்த பொன்னாங்காணி என்று பெரியவளவு தான் முழுவதும் நிரம்பியிருந்தது.

பள்ளத்தாக்குப்போல நடுவினில் ஏன் இந்தப் பள்ளம், இருமருங்கும் ஏன் இந்தப் புட்டி சுமார் ஐந்து வயதான என் கேள்விகள், இராசா தேர் ஓட்டிய இடமாம் என்ற பதில்களிலிருந்து மேலும் பல கேள்விகளை எல்லோரிடமும் கேட்பது உங்கள் வீட்டு மேசையிலிருந்த இரும்புக் குதிரையின் தலையை அசைக்கப் பார்ப்பது இன்றும் என் மனதை விட்டு அகலாதிருக்கின்றது.

வயற்கரையாள் என்று என்னைச் சீண்டுவது திடலிப்பிட்டியார் எல்லோரும் வயற்கரையை நாடித்தானே வருகிறீர்கள் என்று நான் சொல்வது ஐந்தாறு வயதில் அறியாப் பருவத்தில் சொன்னவை வாழ்க்கையில் பின்பு நிஜம் ஆகியது. அசை போடுவது போன்ற அந்த நினைவுச் சுவடுகள்........................

வீட்டில் நீங்கள் மூத்தவர் யாருக்கும் உங்களோடு கதைக்கப் பயம். எடுத்தவுடன் இந்த நல்லூர்க் கந்தசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணை, இந்தச் சோத்தின் ஆணை என்று உங்கள் வாயில் இருந்து வருமே அந்தச் சின்னவயதில் ஆணை என்பதற்கு விளக்கம் கேட்டேனே ஞாபகம் இருக்கிறதா?

தவறாமல் பத்திரிகை படிப்பீர்கள் அருகில் இருந்து எல்லாத் தலைப்புக்களையும் வாசிப்பேன். எனக்குப் பிடித்தவற்றை மட்டுமே வாசித்து உங்கள் வீட்டில் எல்லோரிடமும் விளக்கம் கேட்பேன். சில இடங்களில் விளக்கிச் சொல்ல முடியாமல் சூசகமாகச் சொன்னவற்றை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

சாவகச்சேரியில் தியேட்டரே இல்லாத அக் காலத்தில் யாழ்ப்பாணம் சென்று படம் பார்க்கும் குழுக்களில் நீங்களும் ஒருவராம் படம் பார்க்கப் போகும் நாள்,அன்று தோட்ட வேலைகள் மாடு கன்று பொறுப்பு தம்பிமார்களிடம் கைமாறும். வேலைப்பளுவென்றாலும் சொல்லப்பயம், அவர்கட்கு அதனை அப்போதே தெரிந்து கொண்டிருந்தேன். உங்கள் தம்பிமார்களும் தோட்டம் தோட்டம் என்று ஒவ்வொருநாளும் போவார்கள். தோட்டம் எப்படியிருக்கும். என்பது எனக்குத் தெரியார் கத்திரி, மிளகாய், பூசினி என்று வண்டிலால் இறக்கி வரும் மூட்டைகளைத் தான் உங்கள் வீட்டில் கண்டிருக்கிறேன்.

மாடு வளைத்து தண்ணீர் இறைக்க வேணுமாம். உங்கள் கடைசித்தம்பி யார்(என் கணவர்) இந்துக்கல்லூரியால் வந்து அவசரமாகச் சாப்பிட்டு விட்டு ஓடுவார். அங்கே சூத்திரி வாளியால் தண்ணீர் இறைப்பார்களாம் நேரிலே கண்டபோது வியப்பாக இருந்தது. பயிர்களின் உயரம் விளைச்சல் எல்லாமே புதுமையாக இருந்தது. ஆளை மூடியிருக்கும். சிகரட் புகையிலை மரங்கள் அப்படி விளைச்சலை இப்போது நான் எங்கும் கண்டதில்லையே.

குஞ்சையாண்ணையின் தோட்டச் செய்கை அது ஒரு தனிரகம். அவருக்கு அது தனிக்கலை நல்ல கைராசியாம் ஆயிரத்து தொழாயிரத்து அறுபதாம் ஆண்டில் திருமணம் செய்தீர்கள் தனி குடித்தனம் போனீர்கள். பிள்ளைகள் நான்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தது. உங்கள் வீட்டில் களவு போனதாம் அதனால் தாடி வளர்க்கிறீங்களாம் சனங்கள் பேசிக் கொண்டார்கள். நீங்கள் எம் வீட்டுக்கு அருகேயுள்ள தூவான் வளவு வைரவருக்கு விளக்கு வைக்க வருவீர்கள். வெள்ளிக்கிழமைகளில் தவறாது தரிசனம் சிலநாட்களில் இருண்டுவிடும். குஞ்சையாத் தார் இன்னும் பூஆயவரவில்லை என்று நினைப்பேன் சில நிமிடங்களில் பூமரங்களில் ரோச் தெரியும். இருமலும் கேட்கும். சாமிக்குப் பூ ஆயவென்றால் எனக்கு நல்ல விருப்பம். அதனால் நான் எப்போதும் வருவேன். இரவில் பூஆயக் கூடாதென்பார்கள் பெரியோர்கள் ஏன் இவ்வளவு நேரம் என்று கேட்பேன் இப்போது தான் தோட்டத்திலிருந்து வந்தேன் என்று சொல்வீர்கள். மனதுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும்.

வாழ்க்கை என்பது வண்டிச் சக்கரம் போன்றதாம் குஞ்சையாண்ணை உறுதி எழுதுதற்கு வெளிக்கிட்டாராம் காணிகள் உறுதிகளைப் பார்க்கிறேன் மணிமணியான எழுத்துக்களால் உறுதிகளை நான் வேறெங்குமே கண்டதில்லை. ஆயிரம் பேர் எழுதிய உறுதிகளில் குஞ்சையாண்ணையின் உறுதியை ஐந்து வயதுப்பிள்ளை கூட எடுக்கும் கிளாக்கர் பட்டத்தை மீசாலை, அல்லரை, கச்சாய், கொடிகாமம், மந்துவில் எல்லாம் சூட்டி மகிழ்ந்தன.

கல்யாண மண்டபம் எங்கும் கலகலப்பாகபேசி இருந்து ஊரவர் ஒவ்வொருவரிடமும் குசலம் விசாரிப்பது ஒரு தனிக்களை எப்போதும் வெள்ளை வேட்டி சால்வை மடிப்புக் கலையாத உடை ஜமீன்தார் போன்ற பேச்சு இப்போது குஞ்சையாண்ணையை நல்லதம்பி என்று சொன்னால் பலருக்குத் தெரியவே தெரியாது. கிளாக்கர் வீடு எது என்று கேடடால் சின்னப் பாலனும் வழிகாட்டும்.

மீசாலையூரான் என்று நான் சொன்னால் கிளாக்கரைத் தெரியுமோ அங்கு நாங்கள் வந்திருக்குறோம் என்றுதான் பலர் கேட்பார்கள். ஆம் ஆம் அவரின் கடைசித் தம்பியாரின் மனைவிதான் நான் என்று கூறிய நாட்கள் எத்தனையோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திரை தட்டுப்பாடு என்றால் எங்கள் வீட்டிற்கு எப்படியும் வருவீர்கள். அல்லது மணிமணியான எழுத்தில் கடிதம் வரும் பட்டியலும் கூடவரும். மனசுக்குப் பாரமாயிருந்தாலும் தம்பி ஒருக்கால் வந்திட்டுப் போ என்று உரிமையான சில வசனங்கள் அழைக்குமே.

ஆண் பிள்ளைகள் இரண்டும் வெளிநாடுகட்குச் சென்றபின் தோட்டம், கிளாக்வேலை, கிறஷர் மேற்பார்வை என்று இப்போது குஞ்சையாண்ணைக்குக் குந்தி இருக்க நேரமில்லையாம். ''ஊர்வாய்க்கு உலைமூடி இல்லை'' என்பது பழமொழி என்வீட்டிலும் அடிக்கடி நான் சொல்லியிருக்கிறேன். யார் யார் முயற்சி எடுத்து முன்னுக்கு வருகிறார்களோ அவர்களையெல்லாம் பிடுங்க நினைக்கும் சில கழுகுக் கண்கள்................................

மூத்த மகளின் திருமணத்திற்கே ஓடியாடித் திரியாதளவு வருத்தங்கள், சமாளித்தீர்கள் சம்பந்தர் கிளினிக் மருந்து ஊசி என்றும் மாறி, மாறி அவியலுமாக அலைந்த நாட்கள் வருத்தம் பார்க்க என வந்த ஒரு நாள் நடக்க முடியாத நீங்கள் தலைமயிர் வெட்டவென பைய பைய நடந்து போய்விட்டீர்கள். என் கணவர் தேடிவந்தார் பின்பு எம் வீட்டு வாயிலில் மோட்டார் சைக்கிள் கோண் கேட்டு வருகிறேன். அண்ணையைக் கொண்டு போய் விட்டிட்டு வருகிறேன் என்ற போது தம்பியின் பின் நீங்கள் சிரித்தபடி அமர்ந்திருக்கிறீர்கள்.

என் கணவர் முன்னே சென்று விட்டார் என்பதை அறிந்து வந்து நீங்கள் சொல்லியழுதவை இன்றோ தம்பியின் பின்னால் நீங்களும்............................ சின்ன வயதாக நான் இருக்கும் போது நீங்கள் பாடும் அந்தப் பாடல் எனக்கு மிகவும் பிடித்தது. அதனால் அடிக்கடி பாடும் படி கேட்பேன் பாடுவீர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோடிளந்த அன்றிலைப்போல் துயரமானேன்
        தோகைமயில் வாயில் அகப்பட்ட சர்ப்பமானேன்
காடுதன்னில் இனம் பிரிந்த கலைபோலானேன்
        கருங்கடலில் காற்றடிக்கும் கப்பாலானேன்
ஓடுகின்ற பாய்மரத்திற் காகமானேன்
        உற்றார் ஒருவரில்லாப் பித்தனானேன்
பாடுபட நானறியேன் பழனிவேலா
        பச்சைமயில் மீது வந்து இரட்சிப்பாயே"

பாவபுண்ணியங்கள் நம்மைத் துரத்துகின்றன (உடல்செத்தபின்பு) அதற்கான விசாரணைகள் யாவுமே தவறாது. உயிருக்கு எப்போதுமே சாவு இல்லை ஆதலால் என்னுள்ளத்தினுள்ளே நிறைந்ததில் சிலவற்றையாவது கொட்டிவிடாமல்............ சுமக்க மாட்டேன்.

"பாடுபட நானறியேன் பழனிவேலா பச்சைமயில் மீது வந்து........... இரட்சிப்பாயே"

திருமதி.தெ.கிருஷ்ணசாமி
(இசை ஆசிரியை)
"அயோத்தி"
மீசாலை.

## சிந்தனைக்குவிருந்து

உடலுக்கு உளைப்புப்போன்று உள்ளத்திற்குத் துன்பம் பலத்தைத் தரும்

எமர்சன்.

தீயபழக்கங்கள் உள்ளவர்களுக்கு தெய்வ அருள் இல்லை.

நபிகள் நாயகம்.

கல்வியின் இலட்சியம் கடவுளை அறியும் வழியை அறிவிப்பதும் கடவுளை அடைவதும் தான்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தினுள்ளே........................

கரம் பிடித்த நாள் முதலாய் குறை எதுவுமின்றி
வளமான வாழ்வதனை வழங்கி
ஆழ்கடலில் கண்டெடுத்த நல்முத்துக்களால்
நான்கு நல்ல முத்துக்களை எனக்களித்த
என் இதய ராஜா இன்று எங்கே
நான் மட்டுமா தேடுகிறேன்
இல்லை..... இல்லை........
சிறகொடிந்த பறவைகளாய்
பிள்ளைகள் நல்வரும் பேரர்கள் அனைவரும்
தேடுகிறோம்..... தேடுகிறோம்...... கிடைக்கவில்லை.
ஆதலால் ஆண்டவனை வேண்டுகின்றோம்
மறுபடியும் உங்கள் கரங்களுக்குள்
குஞ்சுகளாய் இருக்க வேண்டுமென்று
நாம் மட்டுமா தொழுகின்றோம்
பிள்ளைகட்குப் பிள்ளைகளாய்
பிரியமுடன் அணைத்திட்ட மாமா
நாமும் தான் வேண்டுகிறோம்.
மறு ஜென்ம விடியலதனில்
அடுத்தவர்கள் மருக்களாய் வருமுன்
நாம் வந்திட வேண்டுமென்று
மூத்த மருமகள் நானும் இனியாரை அழைத்திடுவேன்.
மாமா........மாமா...... என்று...........
ஆயிரம் ஆயிரம் உறவிருந்தாலும்
என் மாமாவைப் போல் வருமா
எத்தனை பிறவிகள் நான் எடுத்தாலும்
அத்தனை பிறவிகளிலும் நீங்களே தான்
என் இனிய மாமா..........
எனக்கு மட்டுமா? நீங்கள் நல்ல மாமா
இளைய மருமகள் எனக்கும் தான் மாமா
எட்டாத தூரமதில் இருந்தாலும்
பட்டாக என் இதயத்தில் இடம் பிடித்தீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிகள் எனக்கிருந்தும் காணவில்லை நேரில்
ஆனால்.............மாமா...........
உள்ளத்தால் உங்களை நானறிவேன்
இடியென செய்தி எட்டியது எனக்கு
மாமா.......... எப்பிறவியில் உங்களை நான் காண்பேன்.
அப்பிறவிவரும் வரை என் நினைவில்
உங்கள் அழகு முகம் இருக்கும் மாமா
உலகம் பலவிதம் அப்பா
அதில் ஒரு இனிய ரகம் உங்கள் குடும்பம்
நீங்கள் சொல்வீர்கள் அப்பா
நாம் அனைவரும் பிரியாத குருவிகளாய்
வாழ்ந்திட வேண்டுமென்று
உங்கள் விருப்பம் அதுவென்றால்
எங்களுக்குத் தடையிருக்குமா அப்பா
சிட்டுக்குருவிகளாய் குட்டிக் கூட்டுக்குள்
ஒட்டியிருந்தோமே நாம் அனைவரும்
அதில் துர்வசம்
தந்தையெனும் குருவியதுவும்
நீண்ட தூரம் சென்றுவிட்டது.
ஆதலால்.....குருவிகள் நாமிங்கே
தனியாகி விட்டாலும்............
தாயெனும் இதய தெய்வத்தின்
வழிகாட்டலில் உங்கள் விருப்பம் போல்
இன்று மட்டுமல்ல என்றென்றும்
நாம் அனைவரும் குடும்பம் என்னும்
கூட்டுக்குள் ஒட்டியே இருப்போம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைந்து இறைஜோதியில்
கலக்க பிரார்த்திக்கும் உங்கள் அன்பு

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள்,பேரமக்கள்**

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY GRAND FATHER NALLATHAMBY

My grandfather's name is Nallathamby,
1997 was the year he met me
I'm not sure if he liked tea
But I know he was as nice as can be

The first time I saw him,
He wasn't heavy or slim
His hearing wasn't normal,
But his eye sight wasn't dim.

He showed me his home.
Eventhough his feet didn't like to roam
He was born in 1928.
And now he is in heaven.

Your loving Grand Son
Keerththanan Kumanan
Vancouver Canada.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மசாந்தி வேண்டி அல்லாரை அறுகம்புலப் பிள்ளையார்மீது துதி

நெல் வயல்கள் சூழ்ந்திருக்க அதில் அமர்ந்த பிள்ளையாரே
பல்பயிர்கள் பாடியுனைப் பரவிநிற்கும் பிள்ளையாரே
நல்லடியார் தினந்தோறும் நண்ணிநிற்பார் பிள்ளையாரே
தொல்லைவினை தீர்த்துநிற்பாய் அறுகம்புலப் பிள்ளையாரே.

வருந்திமனம் வாடியுனைப் பணிந்துநிற்பார் பிள்ளையாரே
பெருந்திரளாய் கூடிக்காவடி ஆடுவார் பிள்ளையாரே
பசுவினமும் பால்சொரிய அபிடேகம் பிள்ளையாரே
பாடியுருகு வார்கள் வினை தீர்த்துநிற்பாய் பிள்ளையாரே

அன்னதானம் அபிஷேகம் அனைத்துமுனக்குப் பிள்ளையாரே
ஆசையுடன் தந்திடுவார் அறுகம்புல்ப் பிள்ளையாரே
வல்லவன் நீ **நல்லதம்பிக்** கருள்செய்வாய் பிள்ளையாரே
இல்லையினிப் பிறவியெனச் சாந்தியருள் பிள்ளையாரே.

### அமுதச் சிதறல்கள்

**பிறருக்கு உதவுவதன்மூலம் வறியவராவது பெரிதல்ல வறுமையிலும் உதவுவதுதான் சிறந்தது**

---

**உலகில் வெற்றிபெற வேண்டுமானால் ஏற்கனவே வெற்றிபெற்றுவிட்டமாதிரி நீங்கள் தோற்றம் தரவேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீசாலை இலந்தைக்கூடல் கங்காணி முருகன்மேல் துதி

கனிமரங்கள் பலசூழ இடங்கொண்ட முருகா
காவல்காக்க வேலுடனே நின்றாளும் முருகா
தொழுவார்க்கு வல்வினைகள் தொலைத்தோட்டும் முருகா
தோத்தரித்தோம் வரந்தாரும் கங்காணி முருகா

வளங்கொண்ட மீசாலைப் பதிவாழும் முருகா
பழம்மலிந்த சோலையுளே உருவான முருகா
தினமுந்தன் புகழ்பாடும் அடியார்க்கு முருகா
மனம்குளிரக் குறைகளைந்து அருவாள்நீ முருகா

அன்றாடம் பூசையிலே மணிஓசை முருகா
உன்னாமம் தனைஒலித்து மகிழுதயையா முருகா
அபிடேகம் அன்னதானம் குறையாத முருகா
அன்பான **நல்லதம்பிக்** காத்தமசாந்தி தருவாய்

## பொன்மொழிகள் சில

- கசப்பான சொல் வெறுப்பை வளர்க்கிறது.
- முரட்டுத்தனமான சொல் சிரிப்பை அளிக்கிறது
- அறிவும் ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள்
- மக்களின் யோசனையைக் கேள் நீயே முடிவு செய்
- வாழ் வளைவதில்லை தங்கம் துருப்பிடிப்பதில்லை
- வியர்வையைச் சிந்து நீ நன்கு வாழ்வாய்
- அறிவாளிகாளின் கூட்டம் உயிருள்ள நூல் நிலையம்
- இன்சொல் இரும்புக் கதவைத் திறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

புலம்பி அழுவதால் பயனேது மில்லை
போவோம் நாமும் ஒருநாள் என்று
தெரிந்தும் பிறவி நோய் அகன்றாரை எண்ணி
வருந்தி வருந்திநாம் வாடிப் பயனென்ன!

மண்ணுலகில் பிறந்தார் மாளாது உடலிருக்க
எண்ணுதலால் பயனேதும் விளைவதே இல்லை
அண்ணலவன் அடியினுக்கே அனவரதமும் துதிக்க
நண்ணினான் **நல்லதம்பி** நாம்கொள்வோம் சாந்தி.

சாந்தி

## அமுத வாசகங்கள்

**உழைப்பின் வேர்கள் கசப்பானவை ஆனால் அதனுடைய கனிகள் இனிப்பானவை.**

**..ராக்பெல்லர்..**

**நீ குறைவாகப் பேசப் பேச உன் பேச்சைக் கேட்பவர்களின் கூட்டம் அதிகரிக்கும்.**

**..வான்ப்ரௌன்..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலதெய்வம் மீசாலை மேற்கு தூவான் வளவு வைரவர் மேல் துதி

தெங்கு நிறை குலைகள் என்றும் தேன் சொரி கனிகள்
-தூங்க
தங்கி வாழும் மந்திகளும் பந்து என விளையாட
சங்கு ஊதி மணி ஒலிக்க சர்க்கரை அமுதும் பொங்க
தொங்கும் வடை மாலையப்பா தூவான் வளவு வைரவப்பா

ஆடியிலே மோதகங்கள் கடகங்களில் அவித்துக் கொட்டி
ஆசையுடன் நேத்தி செய்து மடை வைத்து பூசை செய்ய
நாடி வரும் அடியாரில் ஓடிவந்து கலையாடி
கூடி நின்றார் குறை களைவாய் தூவான் வளவு
-வைரவப்பா

வெள்ளி தோறும் விளக்கு ஏற்றி விரும்பி வேண்டும் வரங்கள்
-எல்லாம்
அள்ளி எமக்கு வழங்குகின்ற அற்புதமே வைரவப்பா
உள்ளம் நிறை பக்தியுடன் உவந்துனக்குப் பூசை செய்த
வள்ளல் **நல்ல தம்பி** யிவர்க்கு நல்ல சாந்தி தாருமப்பா

காவலுக்கு நாயுண்டு கையினிலே சூலமுண்டு
ஏவலுக்குக் கணங்களுண்டு இரவு பகல் வேலையுண்டு
ஆவலுக்குஅடியார் உனக்கு அற்புதங்கள் நிறைய உண்டு
கூவலுக்குக் குறைகளைந்து சாந்தி தாரும் வைரவப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலை வேம்பிராய் அலாக்கிரக பூதிவரத விநாயகர் மேல் துதி

வேம்பிராய்க்கும் மீசாலையூர்க்கும் மிகவருள் செய்திடும்
-விநாயகரே
மா பலா கதலி பனையொடு தெங்கு மிக்கவே சொரிந்திடும்
-விநாயகரே
வயலினில் நெல்லும் தோட்டத்தில் பயிர்களும் விளையச் செய்திடும்
- விநாயகரே
அம்புயம் அல்லி அழகு சுனையருகே விரும்பித் தோன்றி நின்ற
- விநாயகரே

வெள்ளிக் கிழமைகளிலும் சதுர்த்தி தினங்களிலும் விசேட பூசையுடன்
- விநாயகரே
அள்ளி நீர் நிரப்பி உன்னி உனை நாட நல்ல அருள் செய்யும்
- விநாயகரே
எள்ளி நகையாடும் ஏனைப் பிறவிகட்கு நல்ல படிப்பினை செய்
- விநாயகரே
தள்ளி இடம் பெயர வைத்து ஊர் காத்த வள்ளல் எம் கலட்டி
- விநாயகரே

தினமும் உனைப் பணிந்து தனது கடமை செய்தார் மனதைத் திருடிநின்ற
-விநாயகரே
மனது உருகி நின்று உனது அடிபணிந்தோம் திருவருள் செய்ய வேண்டும்
- விநாயகரே
கனவு நினைவுகளில் நிறைந்த காட்சிதரு அலாக்கிரக பூதிவரத
-விநாயகரே
நினது சரணடைந்த **நல்லதம்பி** யவர்க் காத்ம சாந்தியருள்
- விநாயகரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிப் பெருக்கு


எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்த அமரர் சின்னப்பு நல்லதம்பி அவர்களின் பிரிவினால் பரிதவித்த எமக்கு ஓடோடி வந்து ஆறுதல் அளித்து வேண்டிய உதவிகளைச் செய்த அன்பு சால் நண்பர்கள், அயலவர்கள் பாசமிக்க உற்றார் உறவினர்கள் மேலும் ஆறுதல் கூறி எம் துயர் குறைக்க எண்ணி நேரிலும், தொலைபேசியிலும், கடிதம் மூலம் அனுதாபச் செய்தி ஈந்தோருக்கும். பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்திய யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய ஆசிரியர் குழாத்திற்கும், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் குழாத்திற்கும், மாவட்ட திட்டமிடல் செயலக உத்தியோகத்தர்களுக்கும் அமரர் நோயுற்ற போது அவருக்கு சேவை புரிந்த வைத்தியகலாநிதிகட்கும், தாதியர், தொண்டர்களிற்கும் அமரரின் இறுதிக்கிரியையின் போது அஞ்சலியுரை ஆற்றியோர்க்கும் மதக் கிரியைகளை செவ்வனே ஆற்றிய மத குருமார்க்கும் தோள் கொடுப்பான் தோழன் என தோள் கொடுத்த அமரரின் அன்பு நண்பர்கட்கும் மேலும் எங்கள் அழைப்பை ஏற்று அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் கலந்து கொண்டு அமரரின் ஆத்மா சாந்திக்காக மனமுருக பிரார்த்தித்த அனைவர்க்கும் இம் மலருக்கு இரங்கலுரை அளித்தோர்க்கும். இதனை மனமுவந்து தொகுத்தளித்தோருக்கும் அழகுற இதனை அச்சிட்டோர்க்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிதனை பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.



**நன்றி**
**மனைவி**
**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

கேசகர்சின்னத்தம்பி + செல்லமுத்து

செல்லம்மா + அமரர் சண்முகநாதன்

அமரர் கிருஸ்ணசாமி + தெய்வநாயகி

னம்மா + கந்தையா

மகேஸ்வரி + அமரர் நடராசா

சரஸ்வதி + தனபாலசிங்கம்

செல்லம்மா

சங்கரப்பிள்ளை + பொன்னம்மா

ஆதிரை + சர்வேந்திரன்

சுபத்திரை + உதயகுமார்

பிருந்தாபன்

கோபிகிருஷ்ணா

கௌசிகா

கோபிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்கவிருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும். உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்? எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கின்றாய் அது வீணாவதற்கு. எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது நீ இங்கிருந்தே எடுக்கப்பட்டது. எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது. எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது. மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலகநியதி.

— பகவத்கீதை —

S.S.R. Computer & Offset Printers, 537, SivanKovil Road, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org